# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1462/25 - 2006 සැප්තැම්බර් 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2006.09.14

*1462/25 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**அரசாங்க முகாமை உதவியாளர் சேவை**

சேவை பிரமாணக் குறிப்பு திருத்தம் - இலக்கம் 01

*2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 1372/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் பிரமாணக் குறிப்பை பின்வரும் முறையில் திருத்தம் செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு கட்டளையிட்டுள்ளது :-*

(i) *பந்தி இலக்கம் 5:2 ஐ நீக்கம் செய்து அதற்குப் பதிலாக பின்வரும் முறையில் புதிய பந்தி பதிலீடு செய்யப்படும் :-*

*5.2- வகுப்பு II இன் அலுவலர்கள் அவ்வகுப்பிற்கு நியமனம் பெற்ற திகதி தொடக்கம் நான்காவது சம்பள படிநிலையை அடைவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன் காண்தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையானது. பணிப்பாளர் நாயகத்தின் பொருட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையொன்றாக அமையும் (xii பின்னிணைப்பு) வகுப்பு II இன் அலுவலர்கள் அவ்வகுப்பிற்கு நியமனம்பெற்ற திகதி முதல் 07 ஆவது சம்பள படிநிலையை அடைவதற்கு முன்னர் இரண்டாம் வினைத்திறன் காண் தடை தொடர்பான தேவையைப் பூர்த்தி செய்தல் வேண்டும். இரண்டாம் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையானது உப பிரிவு 5: 2: 1 இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு இரண்டாம் மொழி பரீட்சையைக் கொண்டிருக்கும்.*

(ii) *உப பிரிவு 5: 2: 1இன் இறுதியில் பின்வரும் வாக்கியம் உள்ளடக்கப்படும் :*

*"ஆங்கில மொழி மூலம் சேவைக்குச் சேர்ந்த அலுவலர்கள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய அரச கரும மொழிகள் இரண்டையும் மேற்காட்டப்படும் ஆகக்குறைந்த தேவைகளுக்கு அமைவாக சித்தியடைதல் வேண்டும்."*

(iii) *5: 3 இன் கீழ் புதிய உப பிரிவொன்று பின்வரும் முறையில் உள்ளடக்கப்படும் :-*

*5: 3 - ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவைகள் ஒவ்வொரு வகுப்புகளினதும் வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இப்பரீட்சைகள் சனவரி மற்றும் யூலை மாதங்களில் நடாத்தப்படவுள்ளது.*

(iv) *14: 3 : 1இன் கீழ் புதிய உப பிரிவொன்று பின்வரும் முறையில் உள்ளடக்கப்படும் :-*

*14: 3 : 1 - பந்தி இலக்கங்கள் 14: 1 மற்றும் 14 : 2 ஆகியவற்றின் பிரகாரம் உள்ளீர்க்கப்பட்ட அலுவலர்கள் உள்ளீர்ப்புச் செய்த திகதி தொடக்கம் 2006.12.31 ஆந் திகதி வரையிலான இடைக் காலத்திற்குள் அவர்கள் அரசாங்க முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு முன்னர் உரியதாக இருந்த முன்னரான சேவைகளின் சேவைப்*

*பிரமாணங்களில் குறிப்பிட்டுள்ள பதவி உயர்வு முறைகளுக்கேற்ப அடுத்து வரும் வகுப்பிற்கு பதவி உயர்வு பெறுவதற்கு தகைமைகள் பெற்றுக்கொண்டிருப்பின் அத்தகைமைகள் பூர்த்தி செய்த திகதி தொடக்கம் அவர்கள் அவ்வாறு பதவி உயர்வு பெறுவதற்கு தகைமைகள் பெற்ற முன்னரான சேவையின் வகுப்பிற்கு நேரொத்ததாக அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பிற்கு பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துக்களை பெறுவர். இதன்படி பிரிவு 14 : 2 இன் கீழ் வரும் குறிப்பு நீக்கம் செய்யப்படும்.*

(v) *14 : 3: 2 இன் கீழ் புதிய உப பிரிவொன்று பின்வரும் முறையில் உள்ளடக்கப்படும் :-*

*14 : 3: 2 – 2003.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியொன்றில் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையின் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டிய அலுவலர்கள் அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் பின்னிணைப்பு* xii *இன் கீழ் முதற் தடவையாக நடைபெறவுள்ள வகுப்பு* II *இற்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்தால் அவர்கள் முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் குறித்த திகதியில் தொடர்புடைய பரீட்சையில் சித்தி பெற்றதாக கருதப்படும். ஏனைய அலுவலர்களுக்கு சேவைப் பிரமாணக் குறிப்பின் உப பிரிவு 14 : 3: 4 இன் ஏற்பாடுகள் மேலும் வலுவிலிருக்கும்.*

(vi) *14 : 3: 3 – கீழ் புதிய உப பிரிவொன்று பின்வரும் முறையில் உள்ளடக்கப்படும் :-*

*14 : 3: 3 இன் அலுவலர் ஒருவர் பதவி வெறிதாக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்டு அல்லது முடிவுறுத்தப்பட்டு அல்லது அந்நேரத்தில் சேவையில் இல்லாதிருத்தல் போன்ற காரணிகளினால் 2005.03.23 ஆந் முடிவுத் திகதியன்று உள்ளீர்ப்புக்கான விருப்பத்தைத் தெரிவிக்க தவறிய அலுவலர் தொடர்பில், மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு ஒழுக்காற்று அதிகாரி முறையான ஒழுக்காற்றுக் கட்டளையை வழங்கியுள்ள விடத்து, அத்தகைய அலுவலருக்கு சேவையில் உள்ளீர்வதற்கோ அல்லது முன்னைய சேவையின் கீழ் இறுதியாக சேவையாற்றிய திகதிக்கு முன்னரான சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கோ தமது விருப்பை தெரிவிப்பதற்கு பஞ்சாங்க மாத்திற்கு மேற்படாத ஒரு காலப்பகுதி வழங்கப்படுதல் வேண்டும். அந்த அலுவலர்கள் ஓய்வூதிய பிரிவுகள் 2 மற்றும் 7 இன் கீழ் ஓய்வுபெறுதல் தொடர்பாக வழங்கப்பட்ட சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவர்களாவார்கள். எவ்வாறாயினும் இந்த உபபிரிவின் ஏற்பாடுகள் மேலே குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் தவிர்ந்த ஏனைய அலுவலர்களுக்கு பொருத்தமற்றது.*

(vii) *பிரிவு 14 : 3 இன் பின்வரும் முறையில் திருத்தப்படும் :-*

*14 : 3: 4 – பிரமாணக் குறிப்பு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட திகதியில் சேவையிலிருந்த அலுவலர்கள் தொடர்பில் இந்தப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகள் ஏற்புடையதாவதற்கான சலுகை காலமாக பிரமாணக் குறிப்பு செயல்வலுப் பெறும் திகதியிலிருந்து 06 பரீட்சை அமர்வுகள் வழங்கப்படும். புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்ட அக்காலப்பகுதிக்குள் அவர்கள் தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். வகுப்பு* II *இற்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்திபெறுதல். இரண்டாம் மொழியில் சித்திபெறுதல் என்பன இந்நோக்கத்திற்கான தகைமைகளாக கருதப்படும். எவ்வாறாயினும் வகுப்பு* II *இற்காக வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் தற்போதைக்கும் சித்தியடைந்துள்ள அலுவலர்கள் இரண்டாம் மொழி தொடர்பான தேவையை பூர்த்தி செய்யவேண்டியதில்லை.*

(viii) *14 : 3: 5 இன் கீழ் புதிய உப பிரிவொன்று பின்வரும் முறையில் உள்ளடக்கப்படும் :-*

*14 : 3: 5 இன் அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் பதவி உயர்வுகள் அல்லது வினைத்திறன்காண் தடை போன்றவற்றிற்கான பரீட்சைகளில் தோற்றும் பரீட்சார்த்திகள் தாம் சேவையில் சேர்ந்த மொழி மூலம் அல்லது ஏனைய அரச கரும மொழியொன்றின் மூலம் பரீட்சைகளின் போது விடையளிக்க முடியும்.*

ஏ. நோபட்,
இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07,
*2006, செத்தெம்பர் 14.*

*9- 873*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.